# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

**C.C.No. 252/2015**

DEPOSITION OF WITNESS : P.W.1

| | | | |
|---|---|---|---|
| Name | : முருகன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.11.2018

முதல் விசாரணை:

நான் தற்போது உசிலம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன அன்பரசன் பெரியப்பா பையன். 27.07.2015ம் தேதி கடமலைக்குண்டு மூக்கம்மாள் இறந்ததற்கு எங்கள் உற்றார் உறவினர் சென்றோம். மாலை 5.40 மணியளவில் கடமலைக்குண்டு -க.விலக்கு இடையில் அய்யனார் கோவில் அருகே இருசக்கரவாகனத்தில் துரைப்பாண்டி ஓட்டிச்செல்ல இறந்து போன அன்பரசன் பின்னால் அமர்ந்து சென்றார். அந்த இருசக்கர வாகனத்தின் பின்னால் நான் தனியார் பேருந்தில் வந்து கொண்டிருந்தேன். இருசக்கரவாகனம் அதிவேகமாக சென்று மைல்கல் மேல் மோதியது. விபத்தில் இறந்துபோன அன்பரசனுக்கு வலது பக்க மேல் தோள் பட்டையிலிருந்து இடுப்புப் பகுதி வரை காயம் இருந்தது. 108 ஆம்புலன்ஸிற்கு போன் செய்து க.விலக்கு மருத்துவமனையில் சேர்த்தேன். மாலை 6.20 மணியளவில் க.விலக்கு மருத்துவமனையில் இறந்துவிட்டார்.போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்தேன். வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து ஏ்ன்னுடையது தான். நான் கொடுத்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

கு.வி.

எதிரி ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

**C.C.No. 252/2015**

DEPOSITION OF WITNESS : P.W.2

| | | | |
|---|---|---|---|
| Name | : ஈஸ்வரன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.11.2018

முதல் விசாரணை:

நான் தற்போது சின்னமனூரில் குடியிருந்து வருகிறேன். சவரிமுடி வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது பெரியப்பா மகன். அன்பரசன் எனது கூடப்பிறந்த தம்பி. 27.07.2015ம் மாலை 5.40 மணியளவில் அய்யனார் கோவில் அருகே விபத்து நடந்தது. கடமலைக்குண்டு கேதத்திற்கு சென்றாயன் என்பவரது இருசக்கரவாகனத்தில் ஆஜர் எதிரி வண்டியை ஓட்ட பின்புறம் அன்பரசன் உட்காந்து வந்தார். எதிரி வேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டியதில் மைல்கல் மீது மோதி விபத்து ஏற்பட்டது. அ.சா.1 விபத்து பற்றி தகவல் கொடுத்தார். க.விலக்கு மருத்துவமனை சென்று நான் பார்க்கும்போது அன்பரசன் இறந்திருந்தார். வலதுபக்கத்தில் அவருக்கு காயம் ஏற்பட்டிருந்தது. அ.சா.1 கொடுத்த புகார் வாக்கு மூலத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

கு.வி.

எதிரி ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

**C.C.No. 252/2015**

DEPOSITION OF WITNESS : P.W.3

| | | | |
|---|---|---|---|
| Name | : பாண்டியம்மாள் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.11.2018

முதல் விசாரணை:

நான் தற்போது சின்னமனூரில் குடியிருந்து வருகிறேன். வளையல் வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது உறவினர். அ.சா.2 எனது கணவரின் அண்ணன். விபத்தில் இறந்துபோன அன்பரசு எனது கணவர். 27.07.2015ம் தேதி மாலை அ.சா.1 எனக்கு துரைப்பாண்டியுடன் அன்பரசு பைக்கில் வந்து அன்பரசு இறந்துவிட்டதாக தகவல் சொன்னார். க.விலக்கு மருத்துவமனைக்கு சென்று நான் பார்த்தபோது அவர் இறந்துகிடந்தார். வலதுபக்கம் அவருக்கு சிராய்ப்பு காயங்கள் இருந்தது. போலீசார் என்னை விசாரித்தனர்.

கு.வி.

எதிரி ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

**C.C.No. 252/2015**

DEPOSITION OF WITNESS : P.W.4

| | | | |
|---|---|---|---|
| Name | : முருகன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.11.2018

முதல் விசாரணை:

நான் தற்போது சின்னமனூரில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1, அ.சா.2 யைத் தெரியும். விபத்தில் இறந்துபோன அன்பரசை தெரியும். 27.07.2015ம் தேதி கடமலைக்குண்டில் மூக்கம்மாள் இறந்த காரியத்திற்காக நான் சென்றிருந்தேன். அப்போது துரைப்பாண்டியுடன் அன்பரசு இருசக்கர வாகனத்தில் நான் ஊருக்கு செல்கிறேன் என்று என்னிடம் சொல்லிவிட்டு சென்றார். என்னிடம் அ.சா.1 அய்யனார் கோவில் அருகே விபத்து நடந்துவிட்டது, உடனே வா என்று தகவல் கூறினார். நான் இருசக்கர வாகனத்தில் சென்று பார்த்தபோது ஆம்புலன்ஸில் ஏற்றி சென்றுவிட்டனர். நான் க.விலக்கு மருத்துவமனைக்கு சென்றேன். அன்பரசுக்கு வலது பக்கத்தில் அடிபட்டிருந்தது. அன்பரசு க.விலக்கு மருத்துவமனையில் இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தனர்.

கு.வி.

எதிரி ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.